# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8074762

C

1. District மாவட்டம் : திருச்சிராப்பள்ளி  PS காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு  Year ஆண்டு : 2021  FIR No. மு.த.அ. எண் : 4/2021  Date நாள் : 01.10.2021

2. (i) Act சட்டம் : Cr.P.C  Sections பிரிவுகள் : 102
   (ii) Act சட்டம் : PC Act  Sections பிரிவுகள் : 7 and 7(A) of the Prevention of Corruption Act 1988, (As amended in 2018)
   (iii) Act சட்டம் :  Sections பிரிவுகள் :
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from நாள் முதல் : 30.09.2021  Date to நாள் வரை :
   Time Period நேர அளவு :  Time from நேரம் முதல் : 1500 hrs  Time to நேரம் வரை : 2000 hrs.
   (b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 01.10.2021  Time நேரம் : 1200 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், 45 Km மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி : மணப்பாறை திருச்சி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் : –  District : மாவட்டம் : –

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : ஆனந்த் ஆரோக்கியராஜ்  (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் : அந்தோணிசாமி
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு : 11.05.1975  (d) Nationality நாட்டினம் : இந்தியன்  (e) Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் : கண்காணிப்பாளர்  (g) Address முகவரி : வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், ஸ்ரீரங்கம் கோட்டம், திருச்சிராப்பள்ளி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   அடையாளம் தெரியாத இடைத்தரகர்கள் / தனி நபர்கள்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 01.10.2021 முற்பகல் 12.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திரு.ஆனந்த் ஆரோக்கியராஜ், கண்காணிப்பாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டம், திருச்சி என்பவர் ஆஜராகி 30.09.2021ம் தேதி திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டார போக்குவரத்து பகுதி அலுவலகத்தில் திடீர் சோதனை செய்தபோது தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகளின்படி (மகஜர்) நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அவர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் மற்றும் திடீர் சோதனை செயல்முறைகளின் (மகஜர்) விபரங்கள் பின்வருமாறு: 01.10.2021 திருச்சிராப்பள்ளி அனுப்புநர் அ.ஆனந்த் ஆரோக்கியராஜ், கண்காணிப்பாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டம், திருச்சி. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி. அய்யா, பொருள்: (தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.10.2021

Name: பெயர் P. அருள்ஜோதி
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண்
ஊ.த.க. பிரிவு, திருச்சிராப்பள்ளி

**திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.04/2021ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......**

மணப்பாறை வட்டார போக்குவரத்து பகுதி அலுவலகம் – திடீர் சோதனை மேற்கொண்டது – மேல்நடவடிக்கை எடுக்க வேண்டி . . . திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி ரகசிய தகவலின் அடிப்படையில், **30.09.2021**ம் தேதி, பிற்பகல் சுமார் **14.00** மணியளவில், திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திலிருந்து திருச்சி ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.ப.அருள்ஜோதி மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு, திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டார போக்குவரத்து பகுதி அலுவலகத்தில் **15.00** மணி முதல் **20.00** மணி வரை திடீர் சோதனை மேற்கொண்டு, சோதனையின்போது கேட்பாரற்று கிடந்த ரூ.**60,000/–**ம் கைப்பற்றப்பட்டு, திடீர் சோதனை செயல்முறைகள் தயார் செய்யப்பட்டது. மேற்படி திடீர் சோதனை செயல்முறைகளின்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் **30.09.2021**ம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள, (Sd) (xxxx)அ.ஆனந்த் ஆரோக்கியராஜ், **01.10.2021** Submitted to the Court of the Hon'ble Special Judge for trial of cases under the Prevention of Corruption Act-1988, Trichy. Received this report and registered a case in Trichy V&AC Cr.No.04/2021 u/s 102 Cr.P.C r/w 7 and 7(A) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) on 01.10.2021 at 13.15 hrs (Sd) (xxxx), 01.10.2021 (P.ARULJOTHI) Inspector of Police, V&AC, Trichy. **திடீர் சோதனை செயல்முறை (மகஜர்)** இன்று **30.09.2021** மாலை **15.30** மணிக்கு திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், மணப்பாறை – கரூர் மெயின்ரோட்டில் மாகாளிப்பட்டி கிராமத்தில் உள்ள மணப்பாறை வட்டார போக்குவரத்து பகுதி அலுவலகத்தை திரு.ஆனந்த் ஆரோக்கியராஜ், த/பெ.அந்தோணிசாமி, கண்காணிப்பாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டம், திருச்சி மற்றும் திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.ப.அருள்ஜோதி மற்றும் அவரது குழுவினர் முன்னிலையில் மேற்கொள்ளும் திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் பொருத்து அலுவலக மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் செயல்முறை நடவடிக்கை மகஜர். திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டார போக்குவரத்து பகுதி அலுவலகத்தில் பணியாற்றும் பொதுப்பணியாளர்கள் தங்கள் அலுவலகப் பணியினை செய்து தருவதற்காக இடைத்தரகர்கள் மூலம் பொது மக்களிடமிருந்து கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், இடைத்தரகர்கள் மேற்படி பொது பணியாளர்களுக்காக, பொது மக்களிடமிருந்து அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதலாக பணம் பெற்று டீ பொது பணியாளர்களுக்கு கொடுப்பதாகவும் அதில் இடைத்தரகர்களும் பயன் பெறுவதாகவும் திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திற்கு தொலைபேசியில் கிடைத்த ரகசிய தகவலின் பேரில், இன்று **30.09.2021** மாலை **15.00** மணிக்கு டீ ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டம், வருவாய் கோட்டாட்சியர்

அலுவலகம், கண்காணிப்பாளர், விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் திருச்சி மாவட்ட, மணப்பாறை வட்டார பகுதி போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகத்தை சுற்றி நான்கு திசைகளிலும் காவலர்களை பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டது. கூஷ் அலுவலகமானது கிழக்கு பார்த்து அமைந்துள்ளது. கூஷ் அலுவலகத்தின் நுழைவாயிலின் முன்பு போர்ட்டிகோவும், அதனை அடுத்து அலுவலகத்தின் உள்ளே முதலில் வரவேற்பு அறையும், அதன் எதிர்புறம் புகைப்படம் எடுக்கும் அறை கிழக்கு பார்த்தும், அதனை அடுத்து உள்ளடங்கியதாக உள்ளே கழிவறைகள் உள்ளது. வரவேற்பு அறையின் வலது புறம் அலுவலக அறை தெற்கு பார்த்தும், மேற்படி அலுவலகத்தின் தென்கிழக்கில் கணிணி அறையும், அதனை அடுத்து மோட்டார் வாகன ஆய்வாளர்-1 அறையும், மேற்படி அறையின் எதிரே மாடிப்படிகட்டுகளும், அதனை அடுத்து பதிவறையும் உள்ளது. மேற்படி அலுவலக வரவேற்பரையின் தெற்கு பார்த்து உள்ள அலுவலக பணியாளர் இருக்கை அறையின் உள்ளே மோட்டார் வாகன ஆய்வாளர்-2 அறையும், அதனை அடுத்து எழுது பொருள் அறையும், அதில் எம்-1 இருக்கையும், மேற்படி அறையில் உள்ளே கணிணி அறையும், அதனை அடுத்து அலுவலக கண்காணிப்பாளர் இருக்கையும், அதனை ஒட்டி எம்-2 இருக்கை உள்ளது. மேற்படி வரவேற்பறையில் 4 நபர்கள் நின்றுகொண்டிருந்தனர். மோட்டார் வாகன ஆய்வாளர்-1 அறையின் வாசலில் 2 நபர்கள் நின்றுகொண்டிருந்தனர். அலுவலக கண்காணிப்பாளர் இருக்கையில் ஒருவர் அமர்ந்திருந்தார், கணினி அறையில் இரண்டு நபர்கள் இருந்தார்கள். போர்ட்டிகோவில் நின்று கொண்டிருந்த அரசு வாகனத்தின் அருகில் ஒருவர் நின்று கொண்டிருந்தார். மோட்டார் வாகன ஆய்வாளர்-1 அறையின் வாசலில் 2 நபர்கள் நின்று கொண்டிருந்த நபர்களிடம் மோட்டார் வாகன ஆய்வாளர் பற்றி கேட்க அதற்கு அவர்கள் MVI அலுவலகத்தின் பின்புறம் வாகன ஆய்வு செய்துகொண்டிருப்பதாக தெரிவித்தார்கள். மேற்படி 2 நபர்களின் அருகே காவலர்களை நிற்கவைத்துவிட்டு, வாகன ஆய்வு செய்யும் இடத்திற்கு சென்று திடீர் சோதனை செய்ய வந்துள்ள விபரம் தெரிவித்து, MVI திரு.சுந்தரராமனை அலுவலகத்திற்கு அழைத்துவரப்பட்டது. MVI திரு.சுந்தரராமன் அவரது இருக்கையில் அமரச்செய்யப்பட்டது. அவரை விசாரணை செய்கையில் அவர் தன் சட்டை பையில் ரூ.400/- இருந்தது அப்பணம் பற்றி கேட்க தன் சொந்த பணம் என்று தெரிவித்தார் மேற்படி பணம் குறித்து அலுவலக ரொக்க கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்ததால் மேற்படி பணத்தினை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. MVI திரு.சுந்தரராமன் அறையின் நுழைவாயிலில் நின்று கொண்டிருந்தவர்களை, வருவாய் கோட்டாட்சியர் அலுவலக கண்காணிப்பாளர் விசாரிக்க தன் பெயர் 1)திரு.ஆனந்தன், வயது.36/2021, த/பெ.மணியன், எண்.61/3, ஏ-பிளாக், பழைய வீட்டுவசதி வாரிய குடியிருப்பு, தஞ்சாவூர் என்றும், தான் திரு.சுந்தரராமன் MVIக்கு தஞ்சாவூரிலிருந்து மதிய உணவு கொண்டு வந்திருப்பதாகவும்

தெரிவித்தார். மேலும் அவரை விசாரணையில் செய்கையில், அவர் அவரது இடது புற மேல் வெளிப்புற சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.250/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி கேட்க அது தனது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், மேற்படி தொகை ரூ.250/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அங்கு நின்று கொண்டிருந்த மற்றொரு நபரை விசாரிக்க தன் பெயர் 2)திரு.பக்ருதீன், வயது.40/2021, த/பெ.காதர்சா, எண்.21, மகாளிப்பட்டி, மணப்பாறை, திருச்சி மாவட்டம் என்று தெரிவித்தார். மேலும் அவரை விசாரணையில் செய்கையில், அவர் தனது இடது மேல் வெளிப்புற சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.100/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி கேட்க அது தனது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், மேற்படி தொகை ரூ.100/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி 2 நபர்கள் நின்று கொண்டிருந்த இடத்தின் அருகே கத்தையாக ஒரு வெள்ளை தாளில் சுற்றி வைக்கப்படிருந்த 50, 100, 200, 500, 2000 ரூபாய் நோட்டுக்கள் கிடந்தது. அதனை வருவாய் கோட்டாட்சியர் அலுவலக கண்காணிப்பாளர் மூலம் எடுத்து எண்ணிப்பார்க்க அதில் மொத்தம் ரூ.54,700/- இருந்தது. அந்த பணத்தை பற்றி அவர்களிடம் கேட்க, எதுவும் சொல்லாமல் மவுனமாக இருந்தனர். மேற்படி தொகை ரூ.54,700/-ம் இடைத்தரகர்கள் அரசு பணியாளர்களுக்கு அலுவலக பணியினை செய்து தருவதற்காக பொது மக்களிடமிருந்து கையூட்டு கேட்டுப்பெற்று கொடுக்க வைத்திருந்த பணத்தை யாரோ கீழே போட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பெயரில் மேற்படி தொகை ரூ.54,700/- காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மேலும், அந்த பணத்துடன் இருந்த வெள்ளைத் தாள்களை எடுத்து பார்க்க, அதில் 1)Monford-1,500/-, 2)NAVA-1400/-, 3)Popular-30/09/2021-12,900/-, 4)Hari-1000/-, 5) Balaji – 1000/-, 6)Annai-14,300/-, 7) Vetri- 9,600/-, Vignesh Boy- 300/-, 8) Bak-5,300/-, Nallaiah-7,400/-ஐ என எழுதப்பட்டிருந்தது. அந்த வெள்ளை காகிதத்தில் உள்ள குறிப்புகள் மேற்படி கைப்பற்றப்பட்ட ரூ.54,700/-சரியாக ஒத்திருந்ததால் மேற்படி குறிப்பு எழுதப்பட்டிருந்த வெள்ளை காகிதங்களை சந்தேகத்தின் அடிப்படையில் காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலக நுழைவு வாயில் அருகில் உள்ள வரவேற்பரையில் நின்று கொண்டிருந்த 4 நபர்களை வருவாய் கோட்டாட்சியர் அலுவலக கண்காணிப்பாளர் விசாரிக்க 1) திரு.அருணாச்சலம் வயது 52/2021, த/பெ அழகப்பா பிள்ளை, காவேரி டிரைவிங் ஸ்கூல், மணப்பாறை, முகவரி: 1060, பன்னாங்கொம்பு, மணப்பாறை, திருச்சி மாவட்டம் என்றும் தான் காவேரி ஓட்டுனர் பயிற்சிப்பள்ளி நடத்துவதாகவும் தான் FC புத்தகம் கேட்டு வந்ததாகவும் தெரிவித்தார், அவரிடம் விசாரணை செய்ய அவர் தனது இடது மேல் வெளிப்புற சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.250/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி கேட்க அது தனது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், மேற்படி தொகை ரூ.250/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. 2) திரு.தனப்பாண்டியன் வயது 58/2021, த/பெ கணேசன், எண்.70/7,

மணப்பாறைப்பட்டி ரோடு, மணப்பாறை, திருச்சி மாவட்டம் என்றும் தான் Vehicle Insurance Agent என்றும் ஒட்டுனர் உரிமம் பெற வந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் விசாரணை செய்ய அவர் தனது வலது வெளிப்புற பேண்ட் பாக்கெட்டில் இருந்து ரூ.150/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி கேட்க அது தனது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், மேற்படி தொகை ரூ.150/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. 3) திரு.வெங்கடேஷ் வயது 53/2021, த/பெ ஜெயராமன், எண்.1/59, பாரதியார் நகர், மணப்பாறை, திருச்சி மாவட்டம் என்றும் தான் மேற்கண்ட அலுவலகத்தின் எதிரே ஸ்ரீ துர்கா ஜெராக்ஸ் என்ற கடை நடத்தி வருவதாகவும், தான் ஒட்டுனர் உரிமம் குறித்து கேட்க வந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் விசாரணை செய்ய அவர் தனது இடது மேல் வெளிப்புற சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.50/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி கேட்க அது தனது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், மேற்படி தொகை ரூ.50/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. 4) திரு.சரவணன் வயது 59/2021, த/பெ நல்லத்தம்பி, எண்.102 ஆர்.வி.எஸ் நகர், காஜாமலை, திருச்சி என்றும் தான் மேற்கண்ட அலுவலகத்தின் எதிரே நல்லையா ஒட்டுனர் பயிற்சி பள்ளி நடத்தி வருவதாகவும், ஆர்.சி புத்தகம் குறித்து கேட்க வந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் விசாரணை செய்ய அவர் தனது இடது மேல் வெளிப்புற சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.300/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி கேட்க அது தனது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், மேற்படி தொகை ரூ.300/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி நபர்கள் நின்று கொண்டிருந்த வரவேற்பறையில் 500, 200, 100 ரூபாய் நோட்டுகள் ஆங்காங்கே கிடந்தன. அவற்றை வருவாய் கோட்டாட்சியர் அலுவலக கண்காணிப்பாளர் மூலம் எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூ.5,300/–இருந்தது. மேற்கண்ட பணம் பற்றி அங்கிருந்தவர்களிடம் கேட்க யாரும் உரிமை கோராததால் அப்பணம் மேற்படி தொகை ரூ.5,300/–ம் இடைத்தரகர்கள் அரசு பணியாளர்களுக்கு அலுவலக பணியினை செய்து தருவதற்காக பொது மக்களிடமிருந்து கையூட்டு கேட்டுப்பெற்று கொடுக்க வைத்திருந்த பணத்தை யாரோ கீழே போட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பெயரில் மேற்படி தொகை ரூ.5,300/– காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகத்தினுள் கேட்பாரற்று கிடந்த மொத்தம் பணம் ரூ.60,000/– குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கந்தரராமனிடம் கேட்க, எதுவும் சொல்லாமல் மவுனமாக இருந்தார். மேற்படி அலுவலக கண்காணிப்பாளர் அறையில் நின்று கொண்டிருந்தவரை விசாரணை செய்ய தன் பெயர் விஜய் வயது 41/2021, த/பெ மாரிமுத்து 9/இ, அத்திக்குளம் தெரு, மணப்பாறை என்றும் தான் மேற்படி அலுவலகத்தின் கண்காணிப்பாளர் என்றும், அலுவலகத்தின் பணிகளை தான் மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். மேலும், அவரை விசாரணை செய்கையில் அவர் தன் சட்டை பையில் ரூ.800/– இருந்தது அப்பணம் பற்றி கேட்க தன் சொந்த பணம் என்று

தெரிவித்தார் மேற்படி பணம் குறித்து அலுவலக ரொக்க கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்ததால் மேற்படி பணத்தினை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் கணினி அறையில் நின்று கொண்டிருந்த இரண்டு நபர்களை விசாரணை செய்ய 1) திரு.மோகன்பாபு வயது 27/2021, த/பெ பிரபாகரன், எண்.81, பார்கவி அப்பார்ட்மெண்ட், மன்னார்புரம், திருச்சி என்றும் தான் Bonton பணியாளர் என்றும், தனக்கு ஓட்டுனர் உரிமம் வேண்டி விண்ணப்பித்தவர்களை புகைப்படம் எடுக்கும் பணி என்று கூறினார். அவரை விசாரணை செய்கையில் அவர் தனது மணி பர்சில் ரூ.800/– இருந்தது அப்பணம் பற்றி கேட்க தன் சொந்த பணம் என்று தெரிவித்தார் மேற்படி பணம் குறித்து அலுவலக ரொக்க கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்ததால் மேற்படி பணத்தினை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 2) திரு.சதிஷ் வயது 32/2021, த/பெ கோவிந்தராஜ், D/M சங்கர் அபோட்ஸ், திருவானைக்காவல், திருச்சி என்றும் தான் Bonton பணியாளர் என்றும், தனக்கு FC எடுக்கும் பணி என்று கூறினார். அவரை விசாரணை செய்கையில் அவர் தனது மணி பர்சில் ரூ.860/– இருந்தது அப்பணம் பற்றி கேட்க தன் சொந்த பணம் என்று தெரிவித்தார் மேற்படி பணம் குறித்து அலுவலக ரொக்க கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்ததால் மேற்படி பணத்தினை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் போர்டிகோவில் இருந்த அரசு வாகனத்தின்(TN45 G1398) அருகில் நின்று கொண்டிருந்த நபரை விசாரிக்க தன் பெயர் திரு.சக்திவேல் வயது 29/2021, த/பெ பிச்சை, 1/823, ராஜாப்பட்டி, பன்னாங்கொம்பு அஞ்சல், மணப்பாறை, திருச்சி என்றும் தான் TN45G1398 வாகனத்தின் ஒப்பந்த ஓட்டுனர் என்றும், தெரிவித்தார். அவரை விசாரணை செய்கையில் அவர் தனது மணி பர்சில் ரூ.140/– இருந்தது அப்பணம் பற்றி கேட்க தன் சொந்த பணம் என்று தெரிவித்தார் மேற்படி பணம் குறித்து அலுவலக ரொக்க கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்ததால் மேற்படி பணத்தினை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. MVI-1 திரு.சுந்தரராமன் அறையில், படை வீரர் கொடி நாள் பதிவேட்டை பார்வையிட, அதில், 30.09.2021 தேதிக்குரிய கொடிநாள் வசூல் தொகை ரூ.10,000/– என எழுதப்பட்டிருந்தது. அப்பணம் பற்றி அவரிடம் கேட்க மேற்படி தொகை அலுவலக கண்காணிப்பாளர் வசம் உள்ளதாக தெரிவித்தார். மேற்படி தொகையை அலுவலக கண்காணிப்பாளர் திரு.விஜய் ஆஜர் செய்தார். அப்பணத்தை கொடிநாள் வசூல் பதிவேட்டுடன் ஒப்பிட்டுப்பார்க்க சரியாக இருந்ததால், அப்பணம் ரூ.10,000/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 1) 2021 ரொக்கப்பதிவேடு 29.09.2021 மற்றும் 30.09.2021 தேதிக்கான 6 பக்கங்கள், 2) 2021 பணம் கையிருப்பு பதிவேடு 22.09.2021 முதல் 30.09.2021 வரை குறிப்புகள் உள்ளது 4 பக்கங்கள், 3) பான்டன் பணியாளர் 2021 பணம் கையிருப்பு

பதிவேடு 01.09.2021 முதல் 30.09.2021 வரை குறிப்புகள் உள்ளது 6 பக்கங்கள், 4) 2021 வருகைப்பதிவேடு செப்டம்பர் மாதத்திற்கான பதிவுகள் உள்ளது 6 பக்கங்கள், 5) பான்டன் பணியாளர் 2021 வருகைப்பதிவேடு செப்டம்பர் மாதத்திற்கான பதிவுகள் உள்ளது 4 பக்கங்கள், 6) 30.09.2021ற்கான Account Statement Report 1 page, 7) 30.09.2021ற்கான Fitness issue Report 1 page, 8) 30.09.2021ற்கான Driving License Test Report 1 page ஆகியவற்றின் பதிவேடுகளில் இருந்து நகல் பெற்று அதில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சுந்தரராமன் அவர்களால் சான்றொப்பமிட்டு பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை இரவு 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி வேண்டுகோள் கடிதத்துடன் கூடிய திடீர் சோதனை செயல்முறையை (மகஜர்) பெற்று திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/2021 u/s 102 Cr.P.C r/w 7 and 7(A) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) ன்படி இன்று (01.10.2021) 13.15 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் திருச்சி, ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலக கண்காணிப்பாளர் திரு.ஆனந்த் ஆரோக்கியராஜ் கொடுத்த 01.10.2021 தேதியிட்ட கடிதம் மற்றும் 30.09.2021 தேதியில் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் (மகஜர்) ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இந்த முதல் தகவல் அறிக்கையில் இதர நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

1/10/2021

(P. ARULJOTHI)